Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் ...

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 198

யாழ்ப்பாணம் ஆவணி 12 றஜப் 6 சனிக்கிழமை (28-8-71)

'ஆடையலங்காரம்உன்னைப் பெருமகன் ஆக்காது. அறிவு உன்னைப் பெருமகன் ஆக்குகிறது.'
-தர்மசக்கரம்.

* மில்க்வைற் நீலசோப்
* பார் சோப்
* சலவைப்பவுடர்

ஆகியவற்றின் பாவித்த மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
த பெ. இல: 77.
யாழ்ப்பாணம்.

# "கைத்தொழில் திட்டங்களில் பாகுபாட்டுக்கு இடமில்லை"

## யாழ் நகரில் அமைச்சர் சுபசிங்கா

யாழ்ப்பாணம், வியாழன்

கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை வடக்கு கிழக்கு என்ற பாகுபாட்டுடனோ அரசியல் கண்ணோட்டத்துடனோ நாம் அமுல்நடத்தவில்லை. முழு நாட்டினதும் சகல மக்களதும் நன்மையைக் கருத்திற்கொண்டே இவைகளை நாம் செயல்படுத்தி வருகிறோம்.

இவ்வாறு நேற்று மாலை கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் வட இலங்கை வர்த்தக கைத்தொழில் சபை கூட்டத்தில் பேசுகையில் கூறினார். கூட்டம் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா தலைமையில் நடந்தது.

யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்தியில் அதிக முன்னேற்றம் கண்டிருப்பதுபற்றி தாம் மகிழ்ச்சியடைவதாகவும், உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களை கொண்டு ஆரம்பிக்கும் தொழில்களுக்கு அரச ஆதரவு கொடுக்கும் என்றும் அமைச்சர் சொன்னார்.

கைத்தொழில் அமைச்சர் திரு டி பி சுபசிங்கா உத்தியோக பூர்வமாக நேற்று வடபகுதிக்கு முதல் தடவையாக விஜயம் செய்தபோது பலாலி விமானநிலையத்தில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. விமானத்திலிருந்து இறங்கிய அமைச்சருக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா மாலைசூட்டி வரவேற்றார். இவரைத்தொடர்ந்து நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம் மாலை சூட்டினார் இதன்பின் யாழ் பதில்மேயர் திரு ஆ துரைராஜசிங்கம் அமைச்சருக்கு மாலை சூட்டி வரவேற்ற போது திரு துரைராஜசிங்கத்தை அமைச்சர் கட்டித் தழுவினார். இருவரும்பழைய நண்பர்கள்.

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர், யாழ் மாநகர சபை உறுப்பினர்களான திரு ஏ விஸ்வநாதன், ஜனாப் எம் ஏ சி எம் காதர் மைதீன்தாபன அதிபர் திரு கோபாலபிள்ளை மகாதேவ திரு பி நாகலிங்கம் திரு ஆர் ஆர் தர்மரத்தினம் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் கூட்டணி பிரமுகர்கள் உட்பட பலர் அமைச்சருக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள்.

அமைச்சருக்கு வலதுபக்கத்தில் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவும் இடதுபக்கத்தில் யாழ்ப்பாணப் பதில்மேயர் திரு ஆ. துரைராஜசிங்கமும் தொடர விமானநிலையத்திற்கு மேளவாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

விமானநிலைய வாசலில் பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்தது. அங்கு நின்ற சிலர் 'சிங்கள-தமிழ் ஒற்

6-ம் பக்கம் பார்க்க



## உதவி சுகாதார அமைச்சர் வடபகுதிக்கு திடீர் விஜயம்

யாழ்ப்பாணம், சனி

உதவி சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா நேற்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். இவ்விஜயம் பற்றி பொதுஜன தொடர்பு அதிகாரிகளோ சுகாதாரப்பகுதியினருக்கோ எவ்வித தகவலும் கிடைக்கவில்லையெனத் தெரியவருகிறது.

ஏற்கனவே வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார கல்வித்திட்டத்தை நேரில் பார்வையிடவே அவர் வந்திருப்பதாக அறியப்படுகிறது. பல இடங்களுக்கும் தான் திடீர் விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாக உதவி அமைச்சர் ஏற்கனவே தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## படகும் பொருளும் பறிமுதல்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறைக் கடலில் நங்கூரமிட்டு நிற்கும் வான் லூக் என்னும் அமெரிக்கக் கப்பலிலிருந்து உடுக்கும் சம்பிகளைக் கடத்திச்சென்ற படகு ஒன்றை சுங்க உப அதிகாரி திரு.கே. விக்னேஸ்வரராஜா கண்டுபிடித்தார். படகும் உடுக்கும் சம்பிகளும் சுங்க அதிகாரி திரு. எஸ். எம். ஜே. சேனாரத்தினாவால் பறிமுதல்செய்யப்பட்டன.

---

### வேலணை நாரந்தனை இணக்க சபைகள்

கோட்டை, வெள்ளி

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த வேலணையிலும் நாரந்தனையிலும் இணக்க சபைகள் நிறுவப்பட இருப்பதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது

---

ஆசிய ஆபிரிக்க விளையாட்டுப்போட்டி

## இலங்கை வீரர்களும் பங்குபற்றுவர்

கோட்டை, வெள்ளி

அடுத்த மாதம் பீக்கிங்கில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க விளையாட்டுப் போட்டியில் இலங்கை வீரர்களும் பங்குபற்றவிருக்கின்றனர். இவ்விளையாட்டுப் போட்டியில் 51 நாடுகள் பங்குபற்றுகின்றன. இலங்கை டேபிள்டென்னிஸ் வீரர்களும், லீகும் இவ் விளையாட்டில் பங்குபற்றுவார்கள்.

தற்போது இலங்கையில் தங்கிப் போட்டிகளில் ஈடுபட்டுவரும் சீன டேபிள் டென்னிஸ் வீரர்கள் நாளை பண்டாரவளையில் இலங்கை வீரர்களுடன் மோதுகின்றனர். கொழும்பில் மேலும் இரு போட்டிகளில் கலந்து கொண்ட பின்னர் சீனவீரர்கள் தாயகம் திரும்புவர்.

வெளிநாட்டு வீரர்களுடன் போட்டியிட்டு வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களை விளையாட்டு அமைச்சர் திரு. ரத்நாயக்கா பாராட்டினார். கடந்த ஒன்றரை வருடத்தில் உடற்பயிற்சி விளையாட்டு வீரர்கள் நல்ல முன்னேற்றமடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்

## ஆழ்கடல் சென்ற மீனவர் மூவர் எங்கே?

பச்சிலைப்பள்ளி, வெள்ளி

தாளையடியிலிருந்து ஆழ் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மூவர் ஐந்து நாட்களாகியும் கரைசேராதிருப்பது இப்பகுதியில் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு நாளுக்கு மட்டுமே போதுமான உணவும் நீரும் மட்டும் கொண்டு யந்திரப்படகில் மீன்பிடிக்கச் சென்ற இம்மூவரையும் அவர்கள் சென்ற யந்திரப்படகையும் மூன்று நாட்களாகத் தீவிர தேடுதல் செய்த பத்துக்கு மேற்பட்ட யந்திரப் படகுகள் ஏமாற்றத்துடன் கரை திரும்பின.

எம். யோன் பொனிபேஸ் என்பவருக்குச் சொந்தமான விக்டோரியா என்ற யந்திரப்படகில் கடந்த திங்களன்று மீன்பிடிக்கச்சென்று இன்னமும் கரை திரும்பாத இம்மூவரின் பெயர் விபரம்: எஸ். தணிகாசலம் (29), ஆர். மரியதாஸ் (22), எஸ். தருமராசா (21).

இவர்களது உறவினர்கள் கடலையே பார்த்தபடி அழுது புலம்பியவண்ணமிருக்கின்றனர்

---

### டாக்டர் தம்பையா நாடு திரும்பினார்

கொழும்பு, வெள்ளி

சீராலியோன் நாட்டு நீதிமன்றத்தில் பணிபுரிவதற்காக அழைக்கப்பட்டு அங்கு சென்றிருந்த இலங்கை நீதியரசர்களில் ஒருவரான டாக்டர் எச் டபிள்யு. தம்பையா கொழும்பு திரும்பியுள்ளார்.

சீராலியோனில் அவரது பணிகளுக்கான ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் டாக்டர் தம்பையா நாடு திரும்பியுள்ளார்.

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p m.
Sat, Sundays 10-30 A.M.
Sean Connery
in
THUNDER BALL
(Cinema Scope

தினசரி பி.ப. 2-00, 9-45
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த
மோட்டார்
சுந்தரம்பிள்ளை


MANOHARA
(Jaffna)
Daily
4-45 7-00 & 9 45 p m
Cornel Wild
in
BEECH RED
(war film color)

ராணி (யாழ்ப்பாணம்)
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
பி.ப. 2-30 இரவு 6-30, 10-00
கஸ்தூரி திலகம்

வெலிங்டன் (யாழ்நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30
இரவு 10-00 மணி

லிடோ (யாழ்.நகர்)
காலை 10-30, பி. ப. 2-00
மாலை 6-00, இரவு 9-30

மற்றும்
கெப்பிட்டல்—பிளாசா
திரைகளில்
நடிகர் திலகம்



சிவாஜி
கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா



நாகேஷ்
நம்பியார்
சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்
தெய்வ மகன்
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வரத்தன் 4-ம் வாய்க்காலில் ஆறு ஏக்கர் கொண்ட தென்னந்தோட்டம் ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: செல்வி த. தவமணி, 72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 3522

அளவெட்டியில் குடியிருப்பதற்கும் தென்னை பயிரிடுவதற்கும் ஏற்ற 50 பரப்பு நிலம். லான்ட் இன்வெஸ்ற் மென்ட்ஸ், 6 பிரதான வீதி, யாழ்ப்பாணம். போன்: 7453. 3527

நல்ல நிலையிலுள்ள 33 ஸ்ரீ 4329 மொறிஸ் 5 தொன் பாரம் ஏற்றக்கூடிய லொறி விற்பனைக்குண்டு. விலை கூறலாம். தொடர்பு கொள்ளவும். C. H. துரைச்சாமி, சுண்டுக்குளி. 3514

EY டேவன் (Devan) நல்ல நிலைமையில் உள்ளது. விலை மதிப்பு Rs. 13,500/- உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். N. நடராஜன், 185, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3528


வெல்லிசினிமா
மானிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
ஏ.வி.எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
அன்னையும் பிதாவும்

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-30, 10-00 மணி.
எம்.ஜி ஆர். - வைஜந்தி
நடித்த
பாக்தாத் திருடன்

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி 4 30
சனி, ஞாயிறு 10-30
மட்டும்
PARIS CAMPARGE

பாகவதர்
டி. ஆர். ராஜகுமாரி
நடித்த
ஹரிதாஸ்
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30


### கல்வி

க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான கலை, விஞ்ஞான, வர்த்தக, விசேட ஆங்கில, சிங்கள (காலை/மாலை) வகுப்புகளும் நுண்கலை (Fine Arts) புதுமுக வகுப்புக்களும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி 107. வருத்தித்துறை வீதி, நல்லூர். 3517

தமிழ்/ஆங்கில மூலம் பண்டிதராக ஆரம்பம் முதல் அரசாங்க உத்தியோகத்தர்கள் வரை சிங்களம், வீடுகள் தோறும் பயிற்சி அளிக்க பதினைந்து வகுப்புகளுக்கு ரூபா 25/- பெண் பட்டதாரியால் ஜீ சி. ஈ (சாதாரண) பரீட்சைக்கு ஆங்கிலம் மூன்று மாதம் வீடுகள் தோறும் பயிற்சி அளிக்க கணித்தியாலத்திற்கு ரூபா 2/- தேவி படிப்பகம், கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 3526

### வாடகைக்கு

மல்லாகம் மின் ஒழுங்கையில் நவநாகரிக வசதிகளுடன் கூடிய பெரிய வீடும் வளவும் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: செல்வி த. தவமணி, 72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 3521

### இணைப்புச்சபைகளை அதிகரிக்க யோசனை

கோட்டை, வெள்ளி கடந்தவருடம் நீதியமைச்சின் இணைப்புச் சபைகள் 30,000 பிணக்குகள் மீது விசாரணை நடத்தியுள்ளன. ஏனைய வருடங்களைவிட இது 60 வீதம் அதிகரித்துள்ளது என நீதியமைச்சின் உத்தியோகபூர்வமான கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

இணைப்புச்சபையின் தொகையை 400 ஆக அதிகரிக்கவும் நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது. தற்போது 368 இணைப்புச் சபைகள் உள்ளன.

### தேவை

யாழ். நகரத்தில் இரண்டு அல்லது மூன்று படுக்கை அறையடங்கிய குழாய் தண்ணீர் மலசல வசதிகளுடன் வீடு ஒன்று ஐப்பசி மாதம் முதலாம் திகதி வரையில் வாடகைக்குத் தேவை. விண்ணப்பிப்போர் தயவு செய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு வீட்டு விபரங்களையும் வாடகை விகிதத்தையும் தெரிவிக்கவும். கி. இ. சுகிர்முத்து, தொழில் நுட்பக் கல்லூரி, அம்பாறை. 3515


யாழ் / கனகரத்தினம்
மத்திய
மகாவித்தியாலயம்
மேற்படி பாடசாலை
3-ம் தவணை
6-9-71-ம் திகதி
திங்கட்கிழமை
தொடங்கும்.
2993 அதிபர்.


### பிரிவுபசாரம்

வருத்தித்துறை வெள்ளி உடுப்பிட்டிக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி நல்லூர் கல்வி வட்டாரத்திற்கு மாற்றப்பட்ட திரு. எஸ். மகேஸ்வர ஐயருக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிரிவுபசார விழாவொன்று நடைபெற்றது. உடுப்பிட்டி கல்விவட்டார அதிகாரி திரு எஸ் இராசையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் பொ கணேசன், ஜே. சே. செல்லத்துரை, எஸ் இரத்தினம் ஆகியோரும் பேசினர். திரு ஆ. க மாணிக்கம் நன்றி கூறினார்.


THE JAFFNA EDUCATION CENTRE

The following Courses are provided:-
1. G. C. E. O. L. } Science, Arts & Commeree
2. G. C. E. A. L. }
3. Cost Accountancy, I C W.A., A.C.C.A. London
4 Banking-Institute of Banking, London
5. Business Administration B. I. M. London
6. Associated Chartered Institute of Secretaries
7. English
8. Sinhalese
The third term re-opens on 1-9-71
364/3, Hospital Road,
Jaffna.
2991

வாதிப்பிரதிவாதியின் வார்த்தையைவிடச் சாட்சிகளின் வாக்குமூலத்துக்குத்தான் வலிமை அதிகம்

யாழ்-வின்சர் வெண்திரையில்




இப்பொழுது திரையிடப்படுகிறது
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன் (இரட்டைவேடங்கள்)
★ கே. ஆர். விஜயா ★ நிர்மலா
★ புஸ்பா ★ நாகேஷ் ★ பி. எஸ். வீரப்பா
நடித்த
சங்கமம்
(முழுநீள ஈஸ்ட்மென் கலர்)

கி. பாகிஸ்தான் படுகொலைகள்

# புதிய சமுதாயத்தின் கடுந்துயரங்கள்

## அமெரிக்க செனட் புதிய விசாரணை நடத்தும்

### வாஷிங்டன் திரும்பிய கென்னடி தகவல்

வாஷிங்டன், ஆகஸ்ட் 27

**கிழக்கு பாகிஸ்தானில் மேற்குப்பாகிஸ்தான ராணுவத்தினர் படுகொலைகள் செய்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உண்டென்றும் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை பற்றி அமெரிக்க செனட் புதிய விசாரணையை நடத்தவிருக்கிறதென்றும் செனட்டர் எட்வர்ட் கென்னடி தெரிவித்துள்ளார்.**

இந்தியாவிலுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் முகாம்களை ஒருவாரகாலமாகச் சுற்றிப்பார்த்து, அவர்கள் நிலைமையை நேரில் அறிந்தபின் செனட்டர் கென்னடி வாஷிங்டன் திரும்பியுள்ளார்.

வாஷிங்டன் தேசிய பத்திரிகையாளர் சங்கத்தில் இது பற்றி அவர் கருத்துத்தெரிவித்துள்ளார். மேற்குப் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்துவரும் ராணுவ உதவிகள் அனைத்தையும் தன்டிக்குமாறு ஜனாதிபதி நிக்சனுக்கு மீண்டும் வேண்டுகோள் ஒன்றைவிடுத்தார்.

தான் அகதிகள் முகாம்களைச் சுற்றிப்பார்த்து அந்த அகதிகளுடன் உரையாடிய பொழுது பலகொடுமைகளை அறிந்ததாகவும், கிழக்குப் பாகிஸ்தானில் மேற்குப் பாகிஸ்தானிய ராணுவத்தினர் சிவிலியன்களை படுகொலைசெய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் தெரிவித்த கென்னடி, ராணுவத்தினர் தீயிடல் கொள்ளையடித்தல், கற்பழித்தல் போன்ற பயங்கரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள் என்றும் இந்த மனிதத் தன்மையற்ற பயங்கரச் செயல்கள் புதிய சமுதாயத்தில் ஏற்பட்ட துன்பகரமான நிகழ்ச்சியன் என்றும் அவர் வர்ணித்தார்.

மேலும் அவர் கூறியதாவது: கிழக்குப் பாகிஸ்தானில் மனித அடிப்படை உரிமைகள் மிருகத்தனமாகப் பறிக்கப்பட்டுள்ளன இவ்விதமான செயல்களைப் பார்த்துக்கொண்டிருப்பது உலக சமுதாயத்திற்கு அவமானமாகும். இந்த அவமானம் அமெரிக்காவிற்கு ஏற்படாமல் பாதுகாக்க பாகிஸ்தானுக்கு அளித்து வரும் உதவிகள் யாவும் நிறுத்தப்படவேண்டும்.

இப்பொழுது இந்தியாவில் 80 லட்சம் கிழக்குப் பாகிஸ்தானிய அகதிகள் இருக்கின்றனர் இவர்களுக்காக ஆண்டொன்றுக்கு 50 கோடி டாலரிலிருந்து 100 கோடி டாலர்வரை இந்தியா செலவிடவேண்டியுள்ளது இந்த உதவிக்கு அமெரிக்கா அளிக்கும் 8 கோடி டாலர்கள் மிகவும் சொற்பமானவையாகும்

செனட்டர் எட்வேர்ட் கென்னடி அமெரிக்கச் செனட் அகதிகள் பற்றிய துணைக் கமிட்டியின் தலைவர் என்பதும், கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையை நேரில் ஆராய்வதற்காக இந்தியா, இஸ்லாமபாத், டாக்கா ஆகிய இடங்களுக்கு நேரில் விஜயம் செய்யத் திட்டமிட்டுவந்தாரென்பதும், இறுதியில் இஸ்லாமாபாத்துக்கும் டாக்காவுக்கும் விஜயம் செய்வதற்காக இவருக்களிக்கப்பட்ட அனுமதியை பாகிஸ்தான் அரசாங்கம் ரத்துச்செய்ததும் குறிப்பிடத்தக்கது

#### பிரிட்டிஷ் ஜெட் விமானங்களுக்கு சீனாவில் கிராக்கி

லண்டன், ஆகஸ்ட் 27

சீனா, ஆறு ஹோக்கர் ஸிட்லி ஜெட் விமானங்களை பிரிட்டனிடமிருந்து வாங்கியுள்ளது தற்போது உலகில் சேவையிலிருக்கும் ஜெட் விமானங்களுள் நவீனமானதும், மிக வேகமாகச் செல்லக்கூடியதுமான இந்த ரைடன்ற் ஜெட் விமானங்களின் விலை சுமார் இரண்டு கோடிப் பவுண்களாகும்.

இவ்விற்பனை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்த ஹோக்கர் ஸிட்லி ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் இவ்வருடம் மார்ச் மாதம் பீகிங் சென்றிருந்தனர். இந்த ஆறு ஜெட் விமானங்களும் மிக விரைவில் சீனாவுக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

மணிக்கு 600மைல் வேகத்தில் பறக்கக்கூடிய இந்த டைரன்ற் விமானங்கள் ஒரு முறையில் 149 பிரயாணிகளை ஏற்றிச் செல்ல வல்லவை.

சீனா ஏற்கனவே நான்கு ரைடன்ற ஜெட் விமானங்களைப் பாகிஸ்தான் இன்டநஷனல் ஏயர்வேஸ் மூலமாக வாங்கியுள்ளது.

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக டைரன்ட் ஜெட்விமானங்கள் உலகெங்கும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன 1965ம் ஆண்டு பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ரைடன்ட் விமானம் உலகிலேயே முதன்முதலாகத் தன்னியக்கமாக ஆகாயத்திலிருந்து விமானத்தளத்தில் கீழிறங்கியது குறிப்பிடத்தக்கது.

#### ஏற்றவேண்டாமென உத்தரவு

இதே நேரத்தில், மேற்குப் பாகிஸ்தானுக்கான ராணுவ சாதனங்களை கப்பல்களில் ஏற்றவேண்டாமென்று சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனம் தனது அங்கத்தவர்களாயுள்ள மாலுமிகள் தொழிலாளர்கள் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளது.

சோவியத்துடனான உறவை

## பலப்படுத்தும் நடவடிக்கையை அரபுச் சமஷ்டி எடுக்கவேண்டும்

### அல்-அஹ்ரம் ஆசிரியர் வலியுறுத்து

கெய்ரோ, ஆகஸ்ட் 27

புதிதாக அமைக்கப்படவிருக்கும் உத்தேச அரபு சமஷ்டி குடியரசு சோவியத் யூனியனுடன் உறவைப்பலப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முதலிடம் அளிக்கவேண்டுமென ஐக்கிய அரபுக் குடியரசின்பிரதான பத்திரிகையான கெய்ரோவிலிருந்து வெளிவரும் அல் அஹ்ரம் பத்திரிகையின் ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

அல் அஹ்ராம் பத்திரிகையின் வெள்ளி இதழில் அவர் மேலும் எழுதியுள்ளதாவது, அண்மையில் சூடானில் ஏற்பட்ட அரசியல் புரட்சிகளை அடுத்து சோவியத்துடன் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது. இக்கசப்பைப் போக்கவேண்டும். அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாகக் கொண்டிருக்கும்கொள்கைகள் மேற்காசியப் பிரச்னையில் அரபு மக்களுக்கு பாதகத்தையே விளைவிக்கும். இதுவரைகாலமும் அரபுமக்களுக்குச் சகல வழிகளிலும் சோவியத் யூனியன் உதவியும் ஒத்துழைப்பும் அளித்து வந்துள்ளது. அந்த ஒத்துழைப்பையும் உதவியையும் மேலும் பலப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபுக்குடியரசு, லிபியா, சிரியா ஆகிய மூன்று அரபு நாடுகளும் ஒரே கொடியின் கீழும் ஒரே தலைமையின் கீழும் சமஷ்டிக் குடியரசாகஒன்றிணைவதற்கு ஒத்துக்கொண்டு அதற்கான புதிய அரசியல் திட்டம் வகுப்பதில் இணக்கம் கண்டதும் இதற்கு மூன்று நாட்டு மக்களிடமும் அனுமதிகோரும் வாக்கெடுப்பொன்றை செப்டம்பர் 1ம் திகதி எடுக்கவிருப்பதும் தெரிந்ததே.

மேற்கு வங்கத்தில் பெருவெள்ளம்

## மால்டா நகரம் மூழ்கியது; 100 பேர் பலி!

புதுடில்லி, ஆகஸ்ட் 27

மேற்கு வங்காளத்திலுள்ள மால்டா நகரம் பெரும்பாலும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள நதி ஒன்று பெருக்கெடுத்ததால் இவ்வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது, இந்நகரத்துடன் தொடர்புள்ள ஒரே ஒரு சாலைப் பகுதியைத் தவிர ஏனையாவும் நீரில் மூழ்கிவிட்டன இராணுவம் படகுதவியுடன் உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

இந்த வெள்ளப்பெருக்கில் 100 பேர் இறந்திருப்பதாகவும் 2000 கால்நடைகள் உயிரிழந்திருப்பதாகவும் இங்கு குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. இந்நகரத்திலுள்ள 50 லட்சம் பேரில் ஏறக்குறைய மூன்றில் இருபகுதியினர் பாதிக்கப்பட்டுள்ளனராம்

### நேபாள பிரதமர் ராஜினாமா

காட்மாண்டு, ஆகஸ்ட் 27

நேபாள பிரதமர் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

நேபாள மன்னர் மகேந்திரா பிரதமரின் நடவடிக்கைகளைப்பற்றியும் நாட்டுக்கு அவை விரோதமாக இருக்கிறதென்றும் குற்றஞ்சாட்டியதை அடுத்து பிரதமர் தனது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார். இவரது ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட மன்னர் மகேந்திரா சிறிதுகாலம் தொடர்ந்து அப்பதவியில் அவரை இருக்குமாறுகேட்டுக்கொண்டுள்ளார்.

நைலோன் வலைகளுடன்

## இராமேஸ்வரத்தில் வைத்து இரு இலங்கையர் கைது

இராமேஸ்வரம், ஆக.27

இலங்கையிலிருந்து களவாடிச் சென்றதாகக் கருதப்படும் நைலோன் வலைகளுடன் இரு இலங்கையரை இராமேஸ்வரத்தில் வைத்து தமிழ்நாடு பொலிசார் கைதுசெய்துள்ளனர்

இலங்கை கடற்பிராந்தியத்திலிருந்து இந்த வலைகள் களவாடப்பட்டு தமிழ் நாட்டுக்குக் கடத்திச்செல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது. நைலோன் வலைகளைப் பறிமுதல் செய்த பொலிசார் இருவரையும் காவலில் வைத்துள்ளனர்,

### பிரிட்டிஷ் அரச மாளிகையை கூர்க்கா வீரர் காவல் செய்வர்

லண்டன், ஆகஸ்ட் 27

சரித்திரத்திலேயே முதன்முறையாகக் கூர்க்கா வீரர்கள் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் வாசஸ்தலமான பக்கிங்ஹாம் மாளிகையைக் காவல் காக்கும் பொறுப்பை ஏற்கவிருக்கின்றனர். சேவைக்கெனத் தம் வாழ்நாளை அர்ப்பணித்த இந்தக் கூர்க்கா வீரர்களின் துணிச்சல் மிகுந்த வீரச் செயல்கள் உலகப் பிரசித்திபெற்றவை.

நவம்பர் மாதம் காவற்பணியை ஏற்கவிருக்கும் கூர்க்கா வீரர்கள், அச்சமயம் பிரிட்டிஷ் இராணுவச் சேவையின் சீருடையையும் நீண்ட உரோமத் தொப்பியையும் அணிந்திருப்பர்.

பக்கிங்ஹாம் மாளிகையைக் காவல் காக்கும் பொறுப்பு இதுவரை பிரிட்டிஷ் இராணுவத்தின் குறிப்பிட்ட ஒரு படைப்பிரிவினுடையதாகவே இருந்துவந்தது ஆனால் சமீப வருடங்களில் உலக யுத்தங்களின் போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்காகப் பாராடிய சகல படைப் பிரிவினருக்கும் இப்பொறுப்பு வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதையடுத்து கூர்க்கா வீரர்கள் இக்காவல் சேவைக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## பொலீவிய முன்னாள் அதிபர்

லிமா ஆகஸ்ட் 27

பொலீவியாவில் வலதுசாரி புரட்சிவாதிகளால் ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட முன்னாள் அதிபர் கேணல் டொரஸும் அவரது குடும்பத்தினரும் மற்றும் சில ஆதரவாளர்களும் பெருநாட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

வலதுசாரிகளின் புரட்சியை அடுத்து கேணல் டொரஸ் பொலீவியாவின் தலைநகரான லாபாசிலிருந்த பெருநாட்டுத்தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்தார் இவரையும் இவரது குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்களையும் புரட்சி அரசாங்கம் பாதுகாப்புடன் பெருநாட்டுக்கு அனுப்பிவைத்தது.

இங்கு வந்து சேர்ந்த டொரஸ் பொலீவியாவி

(4-ம் பக்கம் பார்க்க)

# "அரசுக்கு இளைஞர்கள் ஆதரவு கொடுக்கவேண்டும்"

— தியாகராசா எம். பி.

சுழிபுரம், வெள்ளி
"எமது நாட்டிலே மாற்றம் ஏற்படவேண்டும்மென்பதை அந்தவர்கள் புதிய மாற்றத்தை விரும்ப மாட்டார்கள். ஆயினும் இளைஞர்கள் இவர்களுடன் செல்லாது நாட்டின் நிலைமையை உணர்ந்து ஒரு புதியபாதையில் செல்ல வேண்டும்" என்று சங்கானை மேற்கு சன சமூகநிலையத்தின் 22-வது ஆண்டு கலை விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் வட்டுக்கோட்டை எம். பி திரு ஆ தியாகராசா குறிப்பிட்டார். விழாவுக்குவலிமேற்கு காரியாதிகாரி திரு மா நடராசா தலைமைவகித்தார். திரு ஆ தியாகராசாமேலும் பேசுகையில், எமது அரசாங்கம் சோஷலிச திட்டங்களை அமுல் நடத்துவதில் அதிக கவனம் செலுத்திவருகின்றது, இத்திட்டத்தின் மூலமே நாட்டில் எற்பட்டுள்ள பொருளாதார முடையை போக்கலாம். இளைஞர்கள் இவ்விடயத்தில் பொறுப்புடன் அரசுக்கு கொடுக்கவேண்டும். என்றார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. வே நல்லநாதன், செல்வி என் செல்லத்துரை உட்பட மற்றும் பலர் பேசினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி நல்லநாதன் பரிசுவழங்கினார். கலைநிகழ்ச்சிகளை அடுத்து மல்லிகைப்பூ நாடகம் மேடையேற்றப்பட்டது.

## பெற்ரேர் தினவிழா

தாவடி, வெள்ளி
கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலைப் பெற்ரேர் தினவிழா அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக பிரதம கல்வியதிகாரி திரு. சந்திரசேகரம்பிள்ளை கலந்துகொண்டு பேசினர்.

தலைமையாசிரியர் திரு த. தருமலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின்போது மேற்படி பாடசாலை வளர்ச்சிக்கு உதவிய செனட்டர் திரு. க. நீதிராசாவின் உருவப்படத்தை, சைவப்புலவர்மணி திரு த குமாரசுவாமிப்பிள்ளை திரைநீக்கம் செய்து வைத்தார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## 'தமிழருக்கு பேரிழப்பு'

யாழ்ப்பாணம், சனி
"இலங்கைவாழ் தமிழ் பேசும்மக்களினதும் மலையக மக்களினதும் நல்வாழ்வுக்காகத் தனது உடல் பொருள் ஆவி அத்தனையும் அர்ப்பணித்த உத்தம புருஷன் வீரத்தலைவன் இரும்பு மனிதன் கோநிதி நாகநாதனின் மறைவு இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களது பேரிழப்பாகும். என்று நயன்மார்கட்டு தமிழரசு வாலிப முன்னணியினர் அவரது குடும்பத்தினருக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

## பொருளாதாரத்தில் விரைவில் பெருமாற்றம்

கோட்டை, வியாழன்
ஒக்டோபர்முதல்நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்படவுள்ளன. இந்த மாற்றங்கள் ஏற்பட்டதும் மக்கள் அரசாங்கம் சாதாரண மக்களுக்காக உழைக்கிறதா அல்லது முதலாளிகளுக்காகப் பாடுபடுகிறதா என்பதையறிவார்கள்.

கண்டி தெற்கு இ. போ.ச. டிப்போவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இ. போ. ச. தலைவர் திரு அனில்முனசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் ஒக்டோபரில் செனட் ஒழிக்கப்படும் புதிய அரசியல் திட்டமும் செயல்படஆரம்பிக்கும் அப்பொழுது நாட்டின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன எனக் குறிப்பிட்டார்

## க்ஷயரோக அறிவு பேச்சுப்போட்டி

தாவடி, வெள்ளி
மக்களிடையே க்ஷயரோகம் பற்றிய அறிவைப் பரப்புவதற்காக பேச்சுப்போட்டியொன்றை நடாத்த இலங்கை தேசிய க்ஷயரோகதடுப்புச்சபையின் யாழ்ப்பாணக்கிளை ஒழுங்கு செய்துவருகிறது.

14 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் 15 வயது தொடக்கம் 20 வயதுவரையுடையோர் 21 வயதுக்கு மேற்பட்டோர் என மூன்று பிரிவுகளாக இப்போட்டி நடைபெறும்.

## இன்று நல்லை இசை விழாவில்

யாழ்ப்பாணம், சனி
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றுவரும் யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 12-வது தமிழிசை விழாவின் 2-ம் நாள் விழாவான இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

மாலை 5-30 மணி-அண்ணாமலை இசைத் தமிழ்மன்ற மாணவிகள் பாட்டு, 6-15 மணி: திரு. எஸ். திலகேஸ்வரன்- பாட்டு.

இரவு 7-30 மணி: திரு. நல். கந்தையா- பாட்டு, 9-00 மணி: திரு. வி. கே. நடராசா பாட்டு, திரு. எஸ் வெங்கடேஸ்வர சர்மா, திரு. சித்திவிநாயகம் ஆகியோர் வயலினும்; செல்வன் ஆ இரகுநாதன், திரு. ரி பாக்கியநாதன், திரு வி. அம்பலவாணர் ஆகியோர் மிருதங்கமும் வாசிப்பார்கள்

......

யாழ். மத்திய பகுதி

## மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம், சனி
யாழ். மத்திய பகுதி பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினரின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் திரு. பி ஏகாம்பரம் பிரதம பார்வையாளராகக் கலந்து கொண்டு வெற்றி வீரர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்

19 வயதுப் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் எஸ். பத்மமோகனும், யாழ். இந்துக் கல்லூரி வீரர் வி பாஸ்கரனும் சிறந்த வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

17 வயதுப் பிரிவில் சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர் ரவீந்திரனும், யாழ். மத்திய கல்லூரி வீரர் கே. எம். சாந்தக்குமாரும் சிறந்த வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (தே. நி)

## சுவிட்சர்லாந்து செல்கிறார்!



யாழ்ப்பாணம் சனி
கொழும்பு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆயுட்காப்புறுதி உதவி முகாமையாளராகக் கடமையாற்றும் இ. ஜம்புகேஸ்வரன் ஆயுட் காப்புறுதி சம்பந்தமான பயிற்சி பெறுவதற்காக இன்றுசுவிட்சர்லாந்து நாட்டிற்குப் பயணமாகிறார். சுவிட்சர்லாந்தில் ஆறு மாத விசேஷ பயிற்சி பெறச் செல்லும் இவர் வண்ணை பிரம்மஸ்ரீ தி. இரத்தினசபாபதிக் குருக்கள் தம்பதிகளின் புதல்வராவர்.

வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலான பாடசாலைகளின் பழைய மாணவரான திரு. ஜம்புகேஸ்வரன் பல்கலைக்கழகத்தில் முதலாம் தரத்தில் பட்டம் பெற்ற பின் 8 வருடங்களின் முன்னர் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் சேர்ந்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 28—8—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அலை 61 மீ

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கிறிஸ்தவ நற்சிந்தனை 6-20 தமிழ்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அலை 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அலை 61 மீ.

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 சிறுவர்விருந்து, 5-15 மாணவர் மன்றம், 5-45 கல்விச் சேவை.

இரவு 6-15 மெல்லிசை, 6-30 நாட்டுப்பாடல்கள், 6-45 வீட்டுவைத்தியம், 7-00 தமிழ் மூலம் சிங்களம், 7-15 புல்லாங்குழல், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## உற்சவம்

நாவற்குழி வெள்ளி
நாவற்குழி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 26ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. அடுத்த மாதம் 4ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும்.

## இவர்களுக்கு வேலை வழங்கவும்

கோட்டை வெள்ளி
பயிற்சிபெற்று வெளியேறியுள்ள தாதிகளை உடனயாக வேலைக்கு அமர்த்துமாறு சுகாதார சேவை அதிகாரியை அகில இலங்கைத் தாதிமார் யூனியன் பொதுக்காரியதரிசி கேட்டுள்ளார். பல அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தாதிகள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பூநகரியில்

## உங்கள் காணிகளைத் திருத்திவிட்டீர்களா?

யாழ்ப்பாணம், சனி
பூநகரிப் பகுதியில் முந்திரிச் செய்கைக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகளில் இதுவரை பயிர் செய்யப்படாத காணிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இக் காணிகளை காணி உதவி ஆணையாளர் திரு. ஈ. எம். டி சில்வா நேரில் சென்று பார்வையிட்டார்.

பயிர்செய்யப்பட்ட காணிகளில் முந்திரிப்பயிர் செழித்துவளர்ந்துள்ளதைப் பார்த்து மகிழ்ச்சி தெரிவித்த உதவி ஆணையாளர் இதுவரை காடுகளை வெட்டித் தம் காணிகளை அபிவிருத்திசெய்யாதவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு காணிப் பகுதிக்கு அறிவித்துள்ளார். (குவிம)

## ஆசிரியர்களுக்கு பாராட்டு

அராலி, வெள்ளி
அராலி தெற்கு முருகமூர்த்தி வித்தியாசாலையிலிருந்து ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு வி நாகலிங்கம், உதவி ஆசிரியர்கள் திரு மு பொன்னுத்துரை, திரு க நமசிவாயம் ஆகியோரின் சேவையையும் இப்பாடசாலையிலிருந்து பதவியுயர்வுபெற்றுபல கொடை தமிழ் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் திரு க பொன்னுத்துரையின் சேவையையும் பாராட்டி அண்மையில் பிரிவுபசார விழாவொன்று நடைபெற்றது.

திரு ஆ தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கருப்பராயிந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு ஆ வைத்திலிங்கம் பேசுகையில் தமிழராகிய நாம் தமிழ்ப்பிள்ளைகள் எங்கிருக்கிறார்களோ அங்கெல்லாம் சென்று நமது பிள்ளைகள் தாய்மொழியிற் கல்வியயில உதவவேண்டும் என்றும் வெளிமாகாணங்களுக்கு இடமாற்றம் கிடைத்ததும் அவை ரத்துச் செய்ய முயற்சிக்கும் பழக்கத்தை ஆசிரியர்கள் கைவிடவேண்டும் என்றும் கூறினார்.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அதிபர் திரு எம் பத்மநாபன் உட்படபலர் பாராட்டிப் பேசினர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## நாகவுக்கு அஞ்சலி

ஒட்டுசுட்டான், வெள்
'தமிழ் இனத்தின் விடுதலைக்காக தமது உடல் பொருள் ஆவி அத்தனையும் ஈந்து தமிழரசு இயக்கத்தின் தோழனாகவும் தொண்டனாகவும் இருந்து தமிழ் சமூகத்தின் நல்வாழ்வுக்காக உழைத்த டாக்டர் நாகநாதனின் மறைவு எம்மை துயரத்தில் ஆழ்த்தியது' என ஒட்டுசுட்டான் தமிழரசு வாலிப முன்னணி அன்றுரின் பிரிவையொட்டி நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அன்னாரின் குடும்பத்திற்கு அனுதாபத் தந்தியொன்றும் அனுப்பிவைக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் மேலும் 3மீன்பிடி பயிற்சிநிலையம்

கோட்டை, வெள்ளி
யாழ்ப்பாணம் மட்டக்களப்பு தங்காலை ஆகிய இடங்களில் மேலும் மூன்று கடற்றொழில் பயிற்சிநிலையங்கள் நிறுவப்படவுள்ளன. பயிற்சிபெறுவோர் தங்கும் வசதிகள் இந் நிலையங்களிலிருக்காது, அங்குள்ள நிலைமைக்கேற்ப விரிவுரையாளர் சென்று பயிற்சி அளிப்பர்.

கடற்றொழில் அபிவிருத்தி பற்றிய அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

......

## பெலீவிய

3-ம் பக்கத் தொடர்ச்சி
லுள்ள தனது ஆதரவாளர்களுக்கு செய்தி ஒன்றை விடுத்துள்ளார். அதிலதனது ஆதரவாளர் தங்கள் சக்தியை ஒன்றுதிரட்டவேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

## கோயில்நிதிக்காக நாடகங்கள்

யாழ்ப்பாணம், சனி
இன்று மாலை ஊரெழு கணேசவித்தியாசாலைமண்டபத்தில் ஊரெழு கலா மன்றத்தவரின் 'வைரமி பெண்' என்ற நாடகமும் மானை நவரச நாடகமன்றத்தாரின் "உதிர்ந்தமலர்" என்ற நாடகமும், ஊரெழு அண்ணாமணிமலர் மன்றத்தாரின் "கசந்த வாழ்வு" என்ற நாடகமும் நடைபெறவிருக்கின்றன. இதில் வரும் நிதி ஊரெழு ஞானவைரவர் கோயில் கட்டடத்துக்காக உதவப்பெறும்.


* உறுதியானதும்
* நீடித்து உழைப்பதும்
* தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை - மர ஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்:

தயாரிப்பாளர்கள்:

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு, கொழும்பு-12
தொலைபேசி: 33143-4

கிளை: 138. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

உள்ளூராட்சி மன்ற பணத்தில் குளறுபடி கண்டுபிடிப்பு

# முற்பணம் வழங்க உதவி ஆணையாளரின் அனுமதிவேண்டும்

அம்பன், வெள்ளி

உள்ளூராட்சி மன்றங்கள் தமக்குக் கீழ் உள்ள ஊழியர்களுக்கு எந்தவிதமான முற்பணங்களையும் வழங்கு முன் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

வட பகுதியில் உள்ள அநேக உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் சபை ஊழியர்களுக்கு வழங்கிய சம்பள முற்பணத்தை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கத் தவறியது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

நி. பி 1132 பிரிவின் கீழ் வழங்கப்படும் துவிச்சக்கர வண்டி முற்பணம், மண்டிகை முற்பணம் போன்றவை ஊழியரது சம்பளத்திலிருந்து ஒழுங்காகக் கழிக்கப்படுவதில்லை என்றும் உத்தியோகத்தர்கள் மாறி வேறிடங்களுக்குச் சென்றவுடன் பணம் அறவிடுவதை நிறுத்திவிடுவதாகவும் இதனால் சபைக்கும் பெரும் நஷ்டம் ஏற்படுவதாகவும் கணக்குப் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ந. நல்லநாதன் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் முற்பணம் வழங்குவது பற்றிச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தமக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் தமது அங்கீகாரத்தின் பின்னரே முற்பணம் வழங்கவேண்டும் என்றும் கொடுக்கப்பட்ட முற்பணம் மாதாமாதம் அறவிடப்பட்டதும் அதுபற்றித் தமக்கு அறிவிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## நீர் ஆராய்ச்சி

யாழ்ப்பாணம், சனி

மணித்தியாலமொன்றுக்கு சுமார் 500 கலன் தண்ணீர் முழங்காவிலில் பெறமுடிந்தது. இந்நீர் சுமார் 40 முழ ஆழத்திலிருந்து பெறப்பட்டது.

காணி இலாகாவின் உதவியுடன் வடபகுதிநீர்ஆராய்ச்சிப் பகுதியினர் மேற்கொண்ட ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையின் போது மணிக்கு சுமார் 500 கலன் தண்ணீர் பெறப்பட்டது. 'டிரிருப்பில்' மூலம் இத்தண்ணீர் வெளிக்கொண்டு வரப்பட்டது.

டேபிள் டெனிஸ்

## 3-வது டெஸ்டில் சீனு வெற்றி

யாழ்ப்பாணம், சனி

தற்போது இலங்கையில் சுற்றுப்பயணம்செய்துவரும் சீன டேபிள் டெனிஸ் கோஷ்டியினர் இலங்கை டேபிள் டெனிஸ் கோஷ்டியுடன் பேராதனையில் மோதிய 3வது டேபிள் டெனிஸ் டெஸ்ட் போட்டியில் ஆண்கள் பிரிவில் 5—1 ஆட்டங்களால் இலங்கைக் கோஷ்டியை தோற்கடித்தனர்.

மேற்படி இருநாட்டு பெண்கள் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. இதில் இரு கோஷ்டியினரும் தலா ஓவ்வொரு ஆட்டங்களில் வெற்றிபெற்றனர்.

சீன-இலங்கை யூனியர் பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற இரு ஆட்டங்களிலும், இலங்கை வெற்றி பெற்றது. இலங்கை வீரர்களான கே ஹுசேன் 21—17, 19—21, 23—20 புள்ளிகளாலும், சி தர்மரட்ண 12—21, 21—16, 23—21 புள்ளிகளாலும் வெற்றிபெற்றனர்.

சீன-இலங்கை கோஷ்டிகளிடையே இதுவரை நடைபெற்ற 3 டெஸ்ட் போட்டிகளில், சீனக்கோஷ்டி 2 டெஸ்ட் போட்டிகளிலும், இலங்கை ஒரு டெஸ்ட் போட்டியிலும், வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை கோஷ்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 2வது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. 4வது டெஸ்ட் போட்டி 31ம் திகதி காலியில் நடைபெறும்.

(தே நி)

## 'கல்முனையில் தனிப்பட்ட காணிகளை சுவீகரியாதீர்'

### முஸ்லிம் மாநாட்டில் தீர்மானம்

சாய்ந்தமருது, வெள்ளி

கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகத்தை கல்முனையில் அமைக்கவேண்டும் என்று கோரும் தீர்மானமொன்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் லீக் மகாநாட்டில் நிறைவேறியுள்ளது.

கல்லோயாவில் கரும்புச் செய்கை விஸ்தரிப்புக்கென அரசாங்கம் காணிகளை சுவீகரிக்கும்போது தனிப்பட்டவர்களுக்கு சொந்தமான நிலங்களையோ அரசாங்கத்திடமிருந்து 'பெர்மிட்' பெற்றுச் செய்கை பண்ணும் நிலங்களையோ சுவீகரிக்கக்கூடாது என்றும் கல்முனை கல்வி மாவட்டத்தில் இலங்கையின் மொத்த முஸ்லிம்களில் கூடியளவிற்கு அதிகமானோர் வாழ்கின்றார்கள். இங்கு நிலவும் ஆசிரியர்பற்றாக்குறையையும்நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசினைக் கோரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கிரிக்கெட்

## கொழும்பு- 216 யாழ்- 98-7

யாழ்ப்பாணம், சனி

வடமாகாண பாடசாலை தெரிவுக் கோஷ்டிக்கும், கொழும்பு தெற்கு தெரிவுப் பாடசாலைக் கோஷ்டிக்குமிடையில், நேற்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான கிரிக்கெட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்புக் கோஷ்டி மொத்தம் 216 ஓட்டங்களைப் பெற்றது. கொழும்புக் கோஷ்டியின் காப்டன் ஜி பத்மநாதன் 51 ஓட்டங்களையும், வி பெர்னாண்டோ 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

வடமாகாணக் கோஷ்டி இன்றைய ஆட்டம் முடிவடையும்போது 7 விக்கட் நஷ்டத்துக்கு 98 ஓட்டங்களைப் பெற்றது இதில் வீரர் மகேந்திரன் 24 ஓட்டங்களைப் பெற்றார், ஆட்டம் இன்று மீண்டும் பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும்.

(தே நி)

## யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் [வரையுள்ளது] வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

மேற்படி சங்கத்திலும், அதன் கிளை ஸ்தாபனங்களிலும் சேர்ந்திருக்கும் வெற்றுச் சாக்குகளின் விற்பனைக்கு 1971-ம் ஆண்டு ஆவணி மாதம் 31-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்குச் சங்கக்காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் கோரப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்போர் தரம் தரமாக பிரித்தெழுதப்பட்டிருக்கும் சாக்குகளுக்கு முறையே விலை குறித்து ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி உறையில் மூடி ஒட்டப்பட்டிருக்க வேண்டியதுடன் அவ்வுறையின் இடது கைமேல் மூலையில் 'வெற்றுச் சாக்கு' கேள்வி எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால்மூலம் மேற்படி சங்கக் காரியதரிசிக்கு 31-8-71 அன்று பிற்பகல் 2-00 மணிக்கு பிந்தாமல் அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு ஒப்பந்தகாரனும் ரூபா 100/- (நூறு ரூபா) பிணைப்பணமாகக் கட்ட வேண்டும். பிணைப்பணம் சங்க அலுவலகத்தில் கட்டியபின் வெற்றுச்சாக்குகளின் கேள்வி விண்ணப்பம் தரப்படும். சங்கத்தின் நெறியாளர் குழு நியமித்த உப-சபையின் பெரும்பான்மையினர் தீர்மானிக்கும் ஒப்பந்தக்காரனுடைய கேள்விப்பத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட விலைகள் திருப்திகரமாக இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கவும் கூடிய விலை குறித்த கேள்விப்பத்திரத்தைத் தானும் நிராகரிக்கவும்மேற்படி உப-சபைக்கு அதிகாரம் உண்டு.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரத்தில் காணப்படும் விலைக்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரன் சாக்குகளை ஏற்கத் தவறின் அல்லது சாக்குகளைத் தரம்பிரிக்குமிடத்து அல்லது இதில் காணப்படும் நிபந்தனைகளுக்கு மாறாக நடக்குமிடத்து அவருடைய பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரனிடம் சாக்குகளின் பெறுமதியான பணத்தைப் பெற்ற தன்பின் வெற்றுச் சாக்குகளும் பிணைப்பணமும் கொடுக்கப்படும். வெற்றுச் சாக்குகள் யாவும் ஒரு கிழமைக்கிடையில் சங்கத்திலும் கிளைக்கடைகளிலும் போய் எடுக்க வேண்டும்.

க. தியாகலிங்கம்
பொது முகாமையாளர்.
74/3, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
26-8-71 2996



## அக்னேஸ் றேச்

### மறைவு

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு" என்ற குறட் பாவுக்கமைய வீடுதேடிவரும் தமதன்புக் கணவரின் நண்பரையும், தானறிந்து பழகியவர்களையும் உள்ளக் கனிவுடன் உணவூட்டி உபசரித்து இன்முகம் காட்டி வழியனுப்பும் இல்லாளாய், இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை என்றுரைத்தபோல் மனை நிறைந்த மனையாளாய்

கணவரின் சுகத்தையும் பிள்ளைகளின் சுகத்தையும் பேணி நேரந்தவறாது உணவூட்டி அன்புகாட்டி குடும்ப சமாதானத்தை நிலைநாட்டி வாரிலே செல்வமும், செல்வாக்கும், சமயபக்தியுமுடையவராய் எல்லோருடனும் அன்பு காட்டி வாழ்ந்தவர்தார்.

பயிற்றப்பட்ட பழம் பெரும் தலைமையாசிரியரும், புலவரையும் மன்னார் மாவட்டத்தில் நன்கறியப்பட்டு மறைந்த திரு ஆரோக்கிய உபாத்தியாயராகிய தாய்மாமன் இவரை இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் 8ம் வகுப்பு மட்டும்படிப்பித்தார். பள்ளி முனையிலிருந்து ஆக்கன்னியர் மடத்துக்கு முதன்முதல் படிக்கச்சென்றவரும்இவரே.

இவர் 1935ம் ஆண்டு திரு டானியேல் றேச்சை மணம் செய்தார் இவருக்கு இரு ஆண்களும் இரு பெண்களுமாக நான்கு பிள்ளைகளுண்டு. இவர் நீண்டநாட்களாக இதயநோயால் பீடிக்கப்பட்டிருந்து சென்ற மாதம் 21ம் திகதி காலை படைத்தோன் கரத்தில் தன் ஆன்மாவை ஒப்படைத்துப் பரமபதமடைந்தார்.

ஓர் அன்பர்


வரையறுக்கப்பட்ட

## மஹாராஜா நிறுவனத்தாரின்

நல்லூர் காட்சிச்சாலைப் பொருட்கள் கொள்முதல் சீட்டிழுப்பில் அதிர்ஷ்டமடைந்த இலக்கங்கள் வருமாறு:

ரூபா 10/-க்கு கொள்முதல் செய்தவர்— அதிர்ஷ்ட எண்: 38
ரூபா 5/-க்கு கொள்முதல் செய்தவர் — அதிர்ஷ்ட எண்: 170
ரூபா 2/-க்கு கொள்முதல் செய்தவர்— அதிர்ஷ்ட எண்: 267

மேற்கூறப்பட்ட இலக்கங்களைக்கொண்ட சீட்டுக்களை யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்க அலுவலகத்தில்சமர்ப்பித்து பரிசில்களைப்பெற்றுக்கொள்ளலாம், எமது பொருட்களைக் கொள்முதல் செய்தவர்கட்கும், வாடிக்கைக்காரர்கட்கும், மற்றும் வியாபார நண்பர்கட்கும் எங்கள் நிறுவனம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நல்லூர்க்கந்தனின் அருளைப்பெற்ற அடியார்கள் அனைவருக்கும் எங்கள் ஆசி உரித்தாகுக!

the maharaja organisation limited



## திருமண அழைப்பு

| | |
|---|---|
| செல்லையா | வேலுப்பிள்ளை |
| குருமூர்த்தி | தவயோகநாயகி |
| (போமன், இ. போ. ச. கோண்டாவில் நிலையம்) | (விஞ்ஞான ஆசிரியை வரணி மகா வித்தியாலயம்) |

1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமை மாலை 5-38 மணி தொடக்கம் 7-11 மணி வரையுள்ள சுபவேளையில், வரணியிலுள்ள மணமகள் இல்லத்தில் திருமண விழா நிகழும்.

31-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 8 மணி வரை மணமகன் இல்லத்தில் (விமன்காமம் வடக்கு) வரவேற்பு உபசார விழா நிகழும்.

உறவினர்களும், நண்பர்களும் இவ்வழைப்பை அன்புடன் ஏற்று மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்:
செ. திருஞானசம்பந்தமூர்த்தி
விமன்காமம் வடக்கு,
தெல்லிப்பழை. 2997

## மணிவாக்கு

பிறர் குற்றங்களில் உனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் பிறர் நிறைவுகளில் உனக்கு வருத்தம் ஏற்படுவது இயல்பு. —லவேட்டர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna | Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 12-ந் திகதி (28-8-71)

# அமெரிக்க டாலரும் நாமும்

40 வருடகாலம் அமெரிக்க நாடுபொருளாதாரத் துறையில் காணாத தீவிர மாற்றத்திட்டமொன்றை அதிபர் நிக்ஸன் உலகமே அதிர்ச்சியடையும்படி வெளியிட்டுள்ளார். அமெரிக்க டாலரை தங்கமாக மாற்றும் மதிப்பை தற்காலிகமாக நிறுத்த உத்தரவிட்டதே இந்தத்திட்டம். இது ஒரு பாரதூரமான மாற்றமென்பதை சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் வல்லரசுகள் ஒப்புக்கொள்கின்றன.

பல்லாண்டுகளாக அமெரிக்க டாலரென்றால் அது தங்கத்தை ஒத்தது என்ற நம்பிக்கையை அமெரிக்கா வளர்த்து வந்துள்ளது. ஓர் அவுன்ஸ் தங்கத்துக்கு 35 டாலரை விலைமதிப்பாகக் கொடுக்க உத்தரவாதமளித்திருந்தது. தங்கத்துக்கு எவ்வளவு மதிப்பும் தேவையும் அதிகரித்திருந்தும் இந்த நிதான விலையை அந்நாடு பல நெருக்கடிகளுள் பாதுகாக்கத்தக்கதாகவிருந்தது.

ஆயினும் கடந்த 15 ஆண்டுகளாக அமெரிக்க தேசம் சரித்திரம் காணாத கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கின்றது. சர்வதேச வர்த்தகத்தில் மோதிய ஆதாயம் அற்று நஷ்டத்தை எதிர்நோக்கவேண்டிய கட்டமேற்பட்டது. மூலதனத்துள் பெரும்பாகம் பிறநாடுகளுக்கு நிதியுதவிக்கும் தொழிலபிவிருத்தித்திட்டங்களுக்கும் வழங்கப்பட்டது. கொரியாவிலும் வியட்னாமிலும் நடந்த நடக்கின்ற யுத்தத்தால் ஏற்பட்ட செலவு அமெரிக்க நிதிநிலையை பெருமளவில் பாதிக்கத் தொடங்கிவிட்டது. இக்காரணங்களால் தங்கத்தின் [illegible] நிலை குலையத் தொடங்கியது. அதன் விளைவால் டாலரின் மதிப்பு திடீரெனக் குறைந்து விட்டது.

சர்வதேச வர்த்தகத்திலும் சர்வதேச நாணய முறையிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது அமெரிக்க டாலர். தொழில்துறையில் முன்னணியில் நிற்கும் ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் டாலரையே தங்கமாகப் போற்றிப் பேணும் கொள்கையுடையன. ஆகையால் சடுதியாக ஏற்பட்ட இத்தக் குழப்பநிலை அந்நாடுகளின் நிதிக் கொள்கையையும் பொருளாதார அமைப்பையும் பெரிதும் பாதிக்குமென்பது கூறாமலே புரியும். அமெரிக்காவைப் பீடித்திருக்கும் இந்தநிதிநோய் தங்களுக்குத் தொற்றாமல் இருக்கத்தக்க பாதுகாப்புகளைத் தேடும் முயற்சியில் இந்நாடுகள் ஈடுபட்டிருக்கின்றன. தங்கள் நாணய மதிப்பை தகுந்த முறையில் திருத்தியமைக்கவேண்டுமோ என்ற கேள்வி ஆராயப்படுகின்றது. நம்மைப் பொறுத்தவரையில் நாம் டாலர் செல்வமற்ற ஆண்டியின் நிலையில் இருக்கிறோம். நம்மை நேரடியாக இந்நோய் பாதிக்காதாயினும் மறைமுகமாக நாமும் இந்நெருக்கடியில் உரிய பங்கு கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உடையவர்களாகின்றோம்.

எங்கள் நாடு இந்நெருக்கடியில் உணர்ந்து செயலாற்றவேண்டிய கருத்துக்கள் பல உள. உலகிலேயே குபேரநாடு எனக் கீர்த்திபெற்ற அமெரிக்காவே நிதி நெருக்கடி காணும் நிலையை நோக்கிச் செல்கின்றது. இதனை நாம் அறியவேண்டியதொன்றுண்டு. எந்த நிலையிலும் சரி ஒரு நாடு பொருளியல் விதிகளுக்கமையத் தனது வாழ்க்கையை நடாத்தத் தவறினால் காலகதியில் கொடிய வறுமைக்குத் தன்னைத் தானே கொண்டுசெல்வது சகஜம். அரசனுக்குஞ்சரி ஆண்டிக்குஞ்சரி கடின உழைப்பும், சிக்கன வாழ்வும், தேசிய பொருளாதாரக் கொள்கையின் இன்றியமையாத இரு அம்சங்களாகத் திகழவேண்டும்.

கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்காவிலே உற்பத்திச் செலவு ஏற ஏற வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டே வந்தது. அதன் விளைவால் தொழிலாளர் சம்பளம் பொருளாதாரத்தின் பலத்தைக் கடுமையாகத் தாக்கியுள்ளது. ஒரு நாட்டின் பணவலிமை அந்நாட்டின் பொருளாதாரத்தின் பலத்திலேயே தங்கியிருக்கிறது என்று அதிபர் நிக்சன் தம் நாட்டு மக்களுக்கு இடித்துரைத்துள்ளார். நமது நாடு சிறிய நாடாக இருப்பினும் இந்த அடிப்படை உண்மையை மிகப் பெரிதாக மதிக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அமெரிக்காவில் நிகழ்ந்துள்ள இந்நெருக்கடி எம்மை எவ்விதத்தில் பாதிக்குமென்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். இது எவ்வாறாயினும்சரி எம்மைப் பொறுத்தளவில் நாமும் உழைப்புக்கும், தொழிலுக்கும், சிக்கன வாழ்வுக்கும் அதிக மதிப்புக் கொடுத்து நமது அவல நிலையை எவ்வகையிலும் சமாளிக்கத் தயாராக வேண்டும். டாலருக்கு எக்கதி நேர்ந்தாலும் நமது நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கூறியவண்ணம் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்தாலொழிய எமது விமோசனத்திற்கு வேறு வழியில்லை.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" கம்பனியாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## குருக்களுக்குப் பாராட்டு

மாவிட்டபுரம், வெள்ளி

"ஆலயங்களில் பூசை செய்து இறைபக்தியை வளர்க்கும் குருமார்களை பரம்பரைபரம்பரையாகவே நாம் உருவாக்க வேண்டும். இதைவிட்டு சைவக்குருமாரைப் போதிக்கும் பாடசாலைகளை நடாத்தி உண்மைக்குருமாரை உருவாக்க முடியாது"

இவ்வாறு நாவன்மார் கட்டு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பிரதம குருவாகக் கடமையாற்றிய "கிரியாவித்தகர்" க. சிவபாதசுந்தரக் குருக்களுக்கு ஆலய பரிபாலன சபையால் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் உரையாற்றிய சைவப்பிரசாரகர் திரு. மயில்வாகனம் கூறினார். ஆலய முகாமையாளர் வே. கந்தையாவால் குருக்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து பேசிய திரு. மயில்வாகனம் மேலும் கூறியதாவது:-

"சைவமக்கள் இன்றுள்ள நிலையில் சைவ ஆலயங்களையும், குருமாரையும் பாதுகாக்க வேண்டியது கடமையாகும். எமது சமயம் அழியாமல் இருக்க சின்னமாக விளங்கும் ஆலயங்கள் மீது சைவமக்கள் கவனமாக இருக்கவேண்டும்.

இதையடுத்து யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்களான க. சிவராசலிங்கம், அ. சொக்கலிங்கம், இ. சரவணமுத்து ஆகியோரும் பாராட்டுரை வழங்கினார்கள்.

சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்கள் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப்பேசினார்.

## அத்திலாந்திக்கைக் கடக்கும் கொன்கோர்ட்

லண்டன், ஆக. 27

ஆங்கில-பிரெஞ்சுத் தயாரிப்பான கொன்கோர்ட் ஸுப்பர்ஸோனிக் விமானம் அடுத்த மாதம் முதன்முறையாக அத்திலாந்திக் கடலைக் கடந்து 4,800 மைல்பறக்கப் போகிறது. '001' என்ற பெயருடைய இந்த இராட்சத விமானம் பிரான்சிலுள்ள டூலூஸில் இருந்து தென் அமெரிக்காவுக்குப் பறக்கும்.

செப்டம்பர் 4-ம் திகதி கிளம்பி கொன்கோர்ட் முதலில் ஐல-டு-ஐல் ஆபிரிக்க மேற்குக் கரையில் இறங்கும். இங்கு 2,600 மைல்கள் தூரத்தை கொன்கோர்ட் 2 1/2 மணிநேரத்தில் கடந்துவிடும். பின்னர் அங்கிருந்து கிளம்பி பிரெஞ்சு கயானாவுக்கு சுமார் இரண்டு மணி நேரத்தில் போய்ச் சேர்ந்து பயணத்தை முடிக்கும். மொத்தமாக இவ்விமானம் பறக்கும் நேரம் நான்கு மணி நாற்பது நிமிடங்களாகும். மணிக்கு 1,400 மைல் வேகத்தில் செல்லும் சக்தியுடையது கொன்கோர்ட் விமானம்.

## கைத்தொழில்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

துறை வாழ்க' 'கூட்டணி அரசாங்கம் வாழ்க' என்று கோஷமெழுப்பினர். சில பிரமுகர்கள் நீலச்சால்வை அணிந்திருந்தனர்.

பருத்தித்துறை சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. என். நடராசா, திரு. என். ரி. சிவஞானம், வழக்கறிஞர் பி. கதிரவேலு உட்படப் பலர் அமைச்சரை வாசலில் நின்று வரவேற்றனர்.

விமானநிலையத்திற்கு வந்திருந்த கார்கள் சிலவற்றில் நீலநிறக் கொடிகள் காணப்பட்டன. விமானநிலையத்திலிருந்து அமைச்சர் மோட்டார் கார் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார்.

# தன்னலமற்ற தொண்டும் சமுதாயமும்

யாழ்ப்பாணம் சனி

மனித சமுதாயத்தை நல்வழியில் இட்டுச்செல்ல வல்லது தன்னலமற்ற தொண்டேயாகும். தன்னலமற்ற தொண்டினாலும் தியாகத்தினாலும்தான் ஒவ்வொருவரும் சமுதாயத்தை முன்னேற்ற முடியும்.

வேலணை முருகன் ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய கொழும்பு இராமகிருஷ்ணமட அதிபர் சுவாமி ரங்கனாந்தாஜி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

வேலணை கிராமசபைத் தலைவர் திரு கே. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சுவாமி ரங்கனாந்தாஜி மேலும் பேசுகையில் விநாயகர் சதுர்த்தி பற்றியும் விளக்கிப் பேசினார்.

அடுத்தமாதம் இந்தியாவுக்குச் செல்லவிருக்கும் சுவாமிஜிக்கு யாழ் குடாவின் பல பகுதிகளிலும் பிரிவுபசார விழாக்கள் நடைபெற்றன. இவர் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் பணியாற்றிவிட்டு இந்தியா திரும்புகிறார்.

## கல்விஇலாகா சேவைபற்றிய அறிக்கை

கொழும்பு, வெள்ளி

ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் இதுவரை கல்வி அமைச்சு மேற்கொண்ட முற்போக்கான திட்டங்கள்பற்றியும் கல்வி இலாகா பொதுமக்களுக்குச் செய்த சேவைகள் பற்றியும் மிகவிரைவில் அறிக்கையொன்றை கல்வி அமைச்சு வெளியிடவிருக்கிறது.

## இவற்றை நிறுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு வெள்ளி

இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய உப உணவுப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்வதை அரசாங்கம் தடைசெய்யத் தீர்மானித்துள்ளது என்று நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா கரவனெல ஆஸ்பத்திரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்வாகக் கட்டிடத்தைத் திறந்துவைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

வருடாவருடம் மிளகாய் இறக்குமதியினால் மட்டும் 3 கோடி ரூபா செலவாகிறது. இங்கு உற்பத்தி செய்யக்கூடிய மற்றும் பல உணவுப் பொருட்களுக்கு அதிக பணம் செலவிடப்படுகிறது. உதாரணமாக வெங்காயம். [illegible] இல்லாத வேளைகளில் இறக்குமதிசெய்வதை விட அவற்றை பாதுகாத்து வைக்கக்கூடிய முறைகளைக் கையாண்டு அக்காலங்களுக்குப் பயன்படுத்தவேண்டும். இந்த வழிமுறைகளை அரசாங்கம் பயிற்றுவிக்கத் தீர்மானித்துள்ளது. இவ்விழாவுக்கு சுகாதார அமைச்சர் திரு டபிள்யு. பி. ஜி. ஆரியதாச தலைமைவகித்தார்.

## இன்று அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அமரர் டாக்டர் ஈ.எம் வி நாகநாதனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக தமிழரசு வாலிபமுன்னணி இன்று யாழ்ப்பாணத்தில் ஓர் அஞ்சலிக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 5மணி தொடக்கம் இரவு 9மணி வரை நடக்கவிருக்கும் இவ்வஞ்சலிக் கூட்டத்தில் தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமும் தமிழரசு எம்.பி.களும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு என். ரி செல்லத்துரை எம் எம் ஸி, டாக்டர் எஸ் ஏ தர்மலிங்கம், திரு சி நாகராசா எம் எம் ஸி உட்படப் பலர் உரை நிகழ்த்துவர்.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தை மைதானத்தில் நிகழும் இவ்வஞ்சலிக் கூட்டத்திற்கு மூதூர் எம் பி திரு. அ. தங்கத்துரை தலைமை வகிப்பார்.

## கார்மோதியவர் ஆஸ்பத்திரியில்

குருநகர், வெள்ளி

நல்லூர் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியால் சென்றுகொண்டிருந்த ஒரு வாலிபரை எதிரே வந்த கார்மோதியதால் படுகாயங்களுக்குள்ளான அவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு வந்த பொலிசார் கார் சாரதியை கைது செய்து பிணையில் விடுவித்துள்ளனர். இதே வீதியில் நேற்று முன்தினம் மூன்று கார்கள் மோதி விபத்துக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

## நயினாதீவில் ரங்கானந்தஜிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

கடந்த எட்டு வருடங்களாகக் கொழும்பு இராமகிருஷ்ணமடத்தில் சிறந்த சேவையாற்றி இந்தியாவிற்குத் திரும்பிச் சென்று அங்கு சேவையாற்றவிருக்கும் சுவாமி ஸ்ரீ ரங்கானந்தஜி மகராஜ் அவர்களுக்கு நயினாதீவு மக்களால் சேவைநலம் பாராட்டு விழா வொன்று நடாத்தப்பட்டது. நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில்முன்றலில் நடைபெற்றது இவ்விழாவில் திரு செ. வி. சாகப் பெருமான் விழா ஆரம்பத்தில் சுவாமி ஸ்ரீ ரங்கானந்தமகராஜ் ஆற்றிய சமயத்தொண்டை பாராட்டிப் பேசினார்.

அதன் பின்னர் அருளுரை வழங்கிய சுவாமி ஸ்ரீமத் ரங்கானந்தஜிமகராஜ், புறத்தே அமைந்திருக்கின்ற உருவ வழிபாட்டை மக்கள் நல்ல முறையில் செய்யவேண்டுமானால் ஒவ்வொருவருடைய அகத்திலும் அருவமாய் ஒளி வீசுகின்ற தெய்வீகத்தன்மையை வெளிக் கொண்டு வரவேண்டுமென்றும் அப்போதுதான் தெய்வீகவாழ்வு மலரும் என்றும் கூறினார்.

—

யாழ்ப்பாணம், சனி

முழங்காவில் பிள்ளையார் கோவிலில் ஆவணிச்சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது. முழங்காவில் வாணி இளைஞர் சார்பில் விசேஷ அபிஷேகம் பூஜை முதலியன நடைபெற்றன.

(குவிம)

வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.
6-9-71 அன்று 3-ம் தவணைக்குக்
கல்லூரி ஆரம்பமாகும்.
2998 அதிபர்